# வெட்டுக்கிளியும் சருகுமானும்

முன்னுரை:

தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமது முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக்கூடாது என்று எண்ணினர். எனவே, காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்று தான் "வெட்டுக்கிளியும் சருகுமானும்" ஆகும்.

குறிஞ்சிப்புதர்:

காட்டில் இருந்த ஓடையின் அருகே கிடந்த மரத்தின் மீது பாசி படர்ந்திருந்தது. அதில் பூச்சி புழுக்கள், நத்தைகள் மொய்த்துக் கொண்டிருக்கும். காட்டு விலங்குகள் நீர் அருந்த அந்த ஓடைக்கு வரும். தாகம் தணிந்த விலங்குகள் பக்கத்திலுள்ள குறிஞ்சிப் புதரில் ஓய்வெடுத்துக் கொள்ளும்.

வெட்டுக்கிளியும் சருகுமானும்:

குறிஞ்சிப்புதரின் கிளையில் வெட்டுக்கிளி ஒன்று வசித்தது. அது ஒரு வாயாடி கூரன் என்ற சருகுமான் ஒரு மாலை நேரம் குறிஞ்சிப் புதர் அருகில் இளைப்பாற வந்தது. அப்போது வெட்டுக்கிளி "என்ன கூரன், இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடுகிறாய்?" என்று கேட்டது. அதற்கு சருகுமான், "இப்பொழுது உன்னிடம் பேச நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருவதால். நான் ஒளிய வேண்டும், என்றது.

வெட்டுக்கிளிக்கு சிறுத்தையான பித்தக்கண்ணுவைத் தெரியும். விழுந்து கிடந்த மரத்தின் அடியில் கூரன் ஒளிந்து கொண்டு தலையை

மட்டும் தூக்கிப் பார்த்து "வெட்டுக்கிளியே! பித்தக்கண்ணு என்னைப் பற்றிக் கேட்டால் எதையும் சொல்லிவிடாதே. அது என்னைப் பிடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும்" என்றது. வெட்டுக்கிளியும் தலையை ஆட்டி உறுதிமொழி அளித்தது.

வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்:

கூரனைத் தேடி வந்த பித்தக்கண்ணு ஓடைப் பக்கம் வந்தது. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் உறுமியது. கூரனைப்பற்றி விசாரித்தது. வெட்டுக்கிளி உற்சாகத்துடன் பதில் சொல்ல வாயைத் திறந்தபோது, கூரனுக்கு அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்து வாயை மூடிக்கொண்டது. ஆனால் பரவசத்தை அடக்க முடியாமல் கூரன் ஒளிந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது. அதைக் கண்ட பித்தக்கண்ணு. கூரன் பதுங்கி இருந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே எட்டியது. அதனால் உறுமிக் கொண்டே வேறுபக்கம் சென்றது.

உயிர் பிழைத்த கூரனும் வெட்டுக்கிளியும்:

ஒளிந்திருந்த இடத்திலிருந்து கூரன் வெளியே வந்து, வெட்டுக்கிளி மீது கோபப்பட்டு அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. "முட்டாள்! பித்தக்கண்ணு முன் குதியாட்டம் போட்டாயே, நான் செத்துப் பிழைத்திருக்கிறேன். அது வாய்க்குள் விழுங்காமல் விட்டது அதிசயம் தான்" என்று வெட்டுக்கிளியிடம் கத்தியது. "இனி இப்படிச் செய்தால், உன்னை என் தங்கக் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்" என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.

முடிவுரை:

அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால் தான் இன்றும்கூட வெட்டுக் கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன.